**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .134/2015** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : உமா | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( A1 present, A2 absent petition filed and allowed )

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.11.2024

---

**முதல் விசாரணை:**

நான் போத்தம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி மாயி என்ற மாயாண்டி எனது கணவர் ஆவார், அரசுத்தரப்பு சாட்சிகள் 3 முதல் 7 வரையிலானவர்களை எனக்கு தெரியும். 1, 2 எதிரிகள் எனக்கு தெரியும். கடந்த 2010ம் ஆண்டு 50,000/– ரூபாய் எதிரியிடம் 2வது எதிரியான மகாலெட்சுமியிடம் வட்டிக்கு கடனகாக பெற்றேன். 50,000/– திற்கு ரூபாய் 6000/– வட்டியை முதலிலேயே எடுத்து கொண்டு மீதி பணத்தை கடனாக கொடுத்தார். மேற்சொன்ன கடனுக்கு 30,000/– ரூபாய் கட்டிய நிலையில் மீதி 20,000/– கட்ட வேண்டி இருந்தது. அதனை தொடர்ந்து ரூபாய் 2,50,000/– லட்சம் ரூபாய் இரண்டாவது எதிரி தன்னிடம் இருப்பதாகவும், வாங்கி கொள்ளும்படி என்னிடம் சொன்னதன்பேரில் நான் அதை பெற்றுக்கொண்டேன். அதற்கும் 50,000/– ரூபாய் வட்டியாக எடுத்துக்கொண்டு. 2 லட்சம் மட்டுமே கையில் தந்தார்.

2. அந்த பணத்தை திருப்பி செலுத்தி வந்த வேளையில் மீண்டும் 3,50,000/– ரூபாய் 2வது எதிரி பெற்றுக்கொள்ளுபடி சொன்னதன் பேரில் 1 லட்சத்திற்கு 12,000/– ரூபாய் என்ற அளவில் வட்டியை எடுத்துக்கொண்டு மீதி பணத்தை கையில் கொடுத்தார். கொஞ்ச கொஞ்சமாக பணத்தை 2012ம் ஆண்டு வரை திருப்பி செலுத்தி வந்தோம். பின்னர் மீதி பணத்தை கொடுக்கமுடியவில்லை. கடைசியில் 30,000/– ரூபாய் மட்டுமே கட்டவேண்டியிருந்தது. நான் என்னிடம் மாடுகளை எல்லாம் விற்று தான் கட்டினேன். மீதி பணத்தை திரும்ப செலுத்த இயலாததால் 1,2, எதிரிகள் என்னிடம் கந்து வட்டிக்கு தானே வாங்கினீர்கள் என்று சொன்னார்கள். 10 நாட்கள் கட்டவில்லை

என்றாலும் அதற்கும் ஒரு வட்டி போட்டார்கள். அதனை தொடர்ந்து ஒருநாள் 1,2 எதிரிகள் வீட்டிற்கு வந்து எங்கள் இடத்தை எழுதி கொடுக்கும்படி எங்களிடம் கேட்டார்கள்.

3. வெள்ளை பேப்பரில் இரண்டு தடவை கையொப்பம் வாங்கினார்கள். நானும் எனது கணவரும் கையொப்பம் போட்டுள்ளோம். 4,40,000/- ரூபாய் எழுதிக்கொண்டு கையொப்பம் வாங்கிகொண்டார்கள். அத்தோடு மற்றொரு பேப்பரிலும் எங்கள் இருவரிடமும் எங்கள் காட்டை காட்டி கையொப்பம் வாங்கிகொண்டார்கள். மேலும் எதிரிகள் மொத்தம் 8,80,000/- ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் எங்கள் வீட்டை காலி செய்து கொடுக்க வேண்டும் என்று மிரட்டினார்கள். நீங்கள் செத்துபோங்கள் என்றும் நாங்கள் வீட்டை எடுத்து கொள்கிறோம் என்று சொன்னார்கள். பின்னர் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். அதன்பேரில் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :

4. நான் தற்போது போத்தம்பட்டியில் தான் குடியிருக்கிறேன். இதற்கு முன்பு உசிலம்பட்டி,வில்லாணி சாலை, PMT நகரில் குடியிருந்தேன். எதிரிகள் எனது வீட்டில் இருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் குடியிருந்தார்கள். நான் மகளிர் சங்கத்தில் உறுப்பினராக கடன் பெற்று மாடு வாங்கி பால் பிச்சீ விற்பனை செய்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவரும் அதே பால் பண்ணையில் தான் பால் பீச்சும் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான்.என்னிடம் பால் பீச்ச வரும் மாட்டு உரிமையாளர்களுக்கு பால் கறந்துவிட்டு கடன் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல யாருக்கும் பாக்கி இல்லை.

5. கந்து வட்டி வாங்கியதற்கான வரவு செலவு பாக்கெட் நோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை நான் வைத்துள்ளேன். எதிரிகள் எனக்கு 2010ம் ஆண்டு கந்துவட்டிக்கு 50,000/- ரூபாய் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதற்குபின்பு 2,50,000/- ரூபாய் எதிரிகள் எனக்கு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கு பின்பு 3,50,000/- ரூபாய் எதிரிகள் எனக்கு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மகளிர் சங்கத்தில் அதிக கடன் பெற்றுவிட்டு பால் பீச்ச வந்தவர்களுக்கு பணம் கொடுக்காமல் கடன் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பால் கறந்த நபர்களுக்கும் என்னால்

பணம் கொடுக்காமல் கடன் வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவத்தின் போது தான் எதிரிகள் வீட்டிற்கு நான் வந்து வட்டியில்லாமல் 6,50,000/– ரூபாயை பத்து நாளில் திருப்பி தந்துவிடுவதாக கூறி வாங்கி சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி பணத்தை கொடுக்கமுடியாமல் 2,10,000/– ரூபாய் மட்டும் திருப்பி கொடுத்துவிட்டு மீதி பணம் 4,40,000/– எனது சொத்தை பொறுப்பாக எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

6. நான் எழுதி கொடுத்தபடி பணம் செலுத்தாததால் எதிரிகள் எனது சொத்தின்மீது உரிமையியல் வழக்கு போட்டார்கள் என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் எதிரிகள் OS 263/2013 வழக்கை எனது மீதும் எனது கணவர் மீதும் நடந்து வருகிறது என்றால் எனது வக்கீலிடம் தான் கேட்கவேண்டும். எனக்கும் எனது கணவருக்கும் வழக்கறிஞர் முருகன் அவர்கள் வக்காலத்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு பின்னால் மதுரை உயர் நீதிமன்ற கிளையில் எதிரிகள் மீது வழக்கு போட்டேன் என்றால் வக்கீலிடம் தான் கேட்கவேண்டும். மதுரை உயர் நீதிமன்ற மீடியேசன் சென்டரில் நான் பேச்சுவார்த்தைக்கு ஆஜரானே என்றால் சரிதான். மீடியேசன் சென்டர் பேச்சுவார்த்தையில் 4 லட்சம் ரூபாய் செலுத்த சொன்னார்கள் என்றும் நான் அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அதற்குபின்பு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றால் கொடுக்கவில்லை. தற்போது சாட்சி SP அலுவலகத்தில் புகார் கொடுத்தேன் என்று சொல்கிறார். SP யிடம் கொடுத்த புகாரில் SP உடனே வழக்கு பதிய சொல்லி உத்தரவு போட்டதன் காரணமாக தான் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான்.

7. SP யிடம் கொடுத்த புகாரில் உசிலம்பட்டி நீதிமன்றத்தில் நடந்த வழக்கு பற்றியும், உயர்நீதிமன்றத்தில் நடந்த வழக்கு பற்றியும் குறிப்பிடப்படவில்லை என்றால் எனது வக்கீலுக்கு தான் தெரியும். 17.10.2012ம் தேதி நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்து ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 02.11.2012ம்தேதி நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன் விசாரித்தார்கள். அந்த புகார் மனு நகலையோ அல்லது மனு ரசீதையோ நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்சொன்ன தேதிகளில் எந்தவொரு சம்பவம் நடைபெறவில்லை என்றும் அதனால் தான் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. எதிரிகள் சிவில் வழக்கு போட்டதையும் உயர் நீதிமன்றத்தில் பணம் கட்ட சொன்னதையும் மறைத்து பணத்தை திருப்பி

கொடுக்கக் கூடாது என்பதற்காக நேரடியாக SP யிடம் சென்று புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எனக்கு வட்டியில்லாமல் கொடுத்த பணத்தை நான் தான் திருப்பி கொடுக்காமல் ஏமாற்றிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் என்னிடம் நேரடியாக வந்து பணம் கேட்கவில்லை என்றும் முறையாக நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள் என்றும், நான்தான் அதனை மறைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வழக்கு நடந்தபோதே அந்த சொத்தை நான் குமார் என்பவருக்கு விற்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் என்னிடம் பணம் கேட்டு கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றும், நான் தான் பணத்தை திருப்பி கொடுக்காமல் இருப்பதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

S.d./ Uma
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.